| | |
|---|---|
| அனுப்புநர்<br>பா.பொன்னையா, இ.ஆ.ப.,<br>இயக்குநர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,<br>பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,<br>சென்னை– 15. | பெறுநர்<br>மாவட்ட ஆட்சித் தலைவர்,<br>அனைத்து மாவட்டங்கள்.<br>(சென்னை நீங்கலாக) |

ந.க.எண்.57/2024/பரா .3.3, நாள்: 07.11.2024

ஐயா/அம்மையீர்,

பொருள்: ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கிராம சபைக் கூட்டம் – 01.11.2024 – உள்ளாட்சிகள் தினத்தன்று நடைபெற இருந்த கிராம சபைக் கூட்டம் – 23.11.2024 நாளன்று நடத்தக்கோருதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.245, ஊ.வ.(சி1) துறை, நாள் 19.11.1998.
2. அரசாணை (நிலை) எண்.130, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 25.9.2006.
3. அரசாணை (நிலை) எண்.65, ஊ.வ(ப.ரா.2) துறை, நாள் 24.5.2022.
4. இவ்வியக்கக இதே எண்ணிட்ட கடிதம். நாள்.17.10.2024.
5. இவ்வியக்கக இதே எண்ணிட்ட கடிதம். நாள்.21.10.2024.

--------

பார்வை 3–ல் குறிப்பிட்ட அரசாணைப்படி, கிராம சபைக் கூட்டம் ஜனவரி 26 (குடியரசு தினம்), மார்ச் 22 (உலக தண்ணீர் தினம்), மே 1 (தொழிலாளர் தினம்), ஆகஸ்ட் 15 (சுதந்திர தினம்), அக்டோபர் 2 (காந்தி பிறந்த தினம்) மற்றும் நவம்பர் 1 (உள்ளாட்சிகள் தினம்) ஆகிய ஆறு நாட்களில் நடத்தப்பட வேண்டும்.

பார்வை 5–ல் காணும் இவ்வியக்கக கடிதத்தில், 01.11.2024 நாளன்று நடைபெறவிருந்த கிராம சபைக் கூட்டமானது நிர்வாக காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டது. மேற்படி ஒத்திவைக்கப்பட்ட கிராம சபைக் கூட்டமானது 23.11.2024 நாளன்று நடத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்படி, கிராம சபைக் கூட்டத்தினை ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டுகளில் சுழற்சி முறையை பின்பற்றி 23.11.2024 அன்று காலை 11.00 மணி அளவில் நடத்த வேண்டும். பார்வை 2–ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு குறைவெண் வரம்பின்படி உறுப்பினர்களின் வருகை இருப்பதை உறுதி செய்து கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

பார்வை 1-ல் கண்டுள்ள அரசாணையில் குறிப்பிட்டுள்ள பொருள்களுடன் 23.11.2024 அன்று நடைபெறவுள்ள கிராம சபைக் கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய பொருட்கள் விபரங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும், அனைத்து கிராம மக்களும் ஆர்வத்துடன் எதிர்வரும் கிராம சபைக் கூட்டத்தில் கலந்துக் கொள்ள ஏதுவாக கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ள இடம், நேரம் ஆகியவற்றை கிராம மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

கிராம சபைக் கூட்டங்கள் மதச்சார்புள்ள எந்தவொரு வளாகத்திலும் நடந்திடக் கூடாது. கிராமசபைக் கூட்டங்கள் நடைபெறும் இடத்தை முன்கூட்டியே ஊரகப் பொதுமக்களுக்கு தெரியப்படுத்திட வேண்டும்.

மேலும், 23.11.2024 அன்று நடைபெறவுள்ள கிராம சபைக் கூட்டம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெற உரிய நடவடிக்கை எடுத்திடவும், கூட்ட நிகழ்வுகளை நம்ம கிராம சபை செயலி " Namma Grama Sabhai Mobile App" மூலம் உள்ளீடு செய்திட வேண்டும் எனவும், அது குறித்த அறிக்கையை 23.11.2024 அன்றே இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு: கிராம சபைக் கூட்டப் பொருள்கள்.

ஒம்/- பா.பொன்னையா,
இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி.

இயக்குநருக்காக

நகல்-

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
   ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
   தலைமைச் செயலகம், சென்னை- 9.
2. மேலாண்மை இயக்குநர்,
   தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
   சென்னை-35.
3. கூடுதல் ஆட்சியர்/திட்ட இயக்குநர்,
   மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
   அனைத்து மாவட்டங்கள்.
4. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
   அனைத்து மாவட்டங்கள்.(உரிய நடவடிக்கைக்காக).

## 23.11.2024 அன்று நடைபெறயுள்ள கிராம சபை கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பொருள்கள் விவரம்.

பொருள் 1: **கிராம ஊராட்சியில் சிறப்பாக பணிபுரிந்த ஊழியர்களை சிறப்பித்தல்:**

கிராம ஊராட்சிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி சிறப்பாக சேவை புரிந்த தூய்மைக் காவலர்கள் உள்ளிட்ட தூய்மைப் பணியாளர்களுக்கு கிராமசபை மூலம் பாராட்டு தெரிவித்தல்.

பொருள் 2: **கிராம ஊராட்சியில் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் மகளிர் சுய உதவிக் குழுக்களை கௌரவித்தல்.**

கிராம ஊராட்சியின் வளர்ச்சியில் முதுகெலும்பாக திகழும் மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறப்பாக செயல்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பாராட்டு தெரிவித்தல்.

பொருள் 3 : வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கிராம ஊராட்சிகள் மேற்கொள்ள வேண்டும். முக்கியமாக கீழ்கண்டவற்றை பின்பற்றிடும் பொருட்டு கிராம சபையில் விவாதித்தல்.

1. தாழ்வான மற்றும் மழைநீர் தேங்கக்கூடிய வாய்ப்புள்ள பகுதிகளை அடையாளங்கண்டு அவ்விடங்களில் மழைநீர் தடைபடாமல் செல்லும் வகையில் வழியேற்றுதல்.
2. புயல் பாதுகாப்பு மையங்களை முறையே சுத்தப்படுத்தி தயார் நிலையில் வைத்தல். புயல் பாதுகாப்பு மையல்களில் குடிநீர் வசதி, மின் விளக்கு வசதி, கழிப்பிட வசதி போன்றவற்றை முறையே பயன்படுத்திடும் வகையில் தயார் நிலையில் வைத்தல்.
3. பருவமழை தொடங்குவதற்கு முன்பே வாய்க்கால்களில் உள்ள அடைப்புகளை நீக்கி, மழைநீர் வழிந்தோடுவதற்கான வகையை ஏற்படுத்துதல்.
4. தேவையான மணல் மூட்டைகள் / சவுக்கு கட்டைகள் போன்றவற்றை தயார் நிலையில் வைத்திருத்தல்.
5. ஏரிகள், பாசன ஏரிகள், குளம், குட்டைகள் போன்றவற்றின் கரைகளை கண்காணித்தல்.
6. மாவட்ட நிர்வாகம் மூலம் அவ்வப்போது தரப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் .

பொருள் 4: தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம்

தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம், வழிகாட்டு நெறிமுறைகளின் படி தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகள் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற ஊராட்சிகள் "ODF Plus – Aspiring" என அறிவிக்கப்பட்டு, பின்னர் அவை ODF Plus என்ற நிலையான திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைப்பதோடு, கூடுதல் நிலையான திட அல்லது திரவக்கழிவு மேலாண்மை வசதிகளைக் கொண்ட ஊராட்சிகள் "ODF Plus – Aspiring" என்ற நிலையை அடைந்தன. அதன் அடுத்த கட்டமாக திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை வசதிகளைக் கொண்ட கிராம ஊராட்சிகளில் தற்போது கிராம ஊராட்சிகள் "ODF Plus – Aspiring" நிலையிலிருந்து, "ODF Plus Rising" என்ற நிலையையும், "ODF Plus – Model Village" என்ற நிலையையும் அடையப்பெற்ற பின்னர், அனைத்து இலக்குகளையும் எய்திய கிராம ஊராட்சிகளை கிராம சபையில் தீர்மானம் இயற்றி அவ்வூராட்சிகளை மேற்குறிப்பிட்டவாறு வகைப்படுத்தி அறிவிப்பு செய்திடல் வேண்டும்.

எனவே, கிராம ஊராட்சிகளில் தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம் வழிகாட்டு நெறிமுறைகளின் படி திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மையில் இலக்குகள் எய்தி ODF Plus Aspiring நிலையில் உள்ள ஊராட்சிகளின் தகுதிகளுக்கேற்றபடி கிராம ஊராட்சிகளை கீழ்க்கண்டவாறு சேர்க்க தெரிவிக்கப்படுகிறது.

1. ODF Plus Rising Village

   திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையில் இருந்த __________ஊராட்சி, திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை வசதிகளைக் கொண்ட _________ஊராட்சி தூய்மையில் உயரும் ஊராட்சி (ODF Plus – Rising) என அறிவிக்கப்படுகிறது.

2. ODF Plus Model Village

   திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மையில் தன்னிறைவு பெற்ற _________ கிராம ஊராட்சி, பார்வைக்கு தூய்மையாக விளங்குவதால் _________ "முன்மாதிரி ஊராட்சி (ODF Plus – Modol Village)" என அறிவிக்கப்படுகிறது.

பொருள் 5 : **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம்**

அ) 2024-25-ம் ஆண்டுக்கான தொழிலாளர் வரவு-செலவு திட்டத்தினை அக்டோபர் 31ம் தேதி வரையிலான முன்னேற்ற அறிக்கையுடன் ஒப்பிட்டு விவாதித்தல்.

| வ.எண் | 2024-2025 (31.10.2024 வரை) | |
|---|---|---|
| | உருவாக்கப்பட்ட மனித சக்தி நாட்கள் | மேற்கொள்ளப்பட்ட செலவினம் |
| (1) | (2) | (3) |
| | | |
| | | |

ஆ) 2025-2026-ம் ஆண்டுக்கான தொழிலாளர் வரவு-செலவு திட்டத்திற்கு பணிகள் தேர்வு செய்தல் குறித்து விவாதித்து அறிக்கை தயார் செய்து கிராம சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பித்தல்.

பொருள் 6 : **ஜல் ஜீவன் இயக்கம்**

- ஜல் ஜீவன் இயக்கத்தின்கீழ் செயல்படுத்தப்படும் கிராம குடிநீர் உட்கட்டமைப்பு பணிகளுக்கு 10% சமூக பங்களிப்பினை வழங்குவதன் மூலம் கிராம ஊராட்சியின் குடிநீர் விநியோக பணிகளில் அனைவரும் பங்கேற்பதை உறுதி செய்தல்.
- கிராம ஊராட்சியில் செயல்பாட்டில் இருக்கும் மற்றும் புதிதாக செயல்படுத்தப்படும் கூட்டுக் குடிநீர் திட்டங்களின் செயல்பாடு மற்றும் திட்டத்தின் முழுமையான விவரத்தினை கிராம சபையில் விரிவாக எடுத்துரைத்து இது தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- பயிற்சி பெற்ற கிராம மகளிர் சுய உதவிக் குழுப் பெண்களை கொண்டு, ஏற்கனவே விநியோகம் செய்யப்பட்டுள்ள கள ஆய்வு கருவிகளை (Field Test Kit) பயன்படுத்தி 15 நாட்களுக்கு ஒருமுறை குடிநீரின் தரத்தினை ஆய்வு செய்து உரிய பதிவேட்டில் பதிவு செய்வதை உறுதி செய்தல்.
- கிராம ஊராட்சியினை "வீடுதோறும் குடிநீர் வழங்கப்பட்ட ஊராட்சி" என்ற நிலைக்கு மேம்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து பணிகளும் கட்டாயம் கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தில் (VPDP) இடம்பெறுவதை உறுதி செய்தல்.
- கிராம ஊராட்சியில் உள்ள பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், அரசு பொதுகட்டிடங்கள் அனைத்திலும் குழாய் இணைப்புகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்தல்.
- குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு அரசால் அரசாணை எண். 260, ஊ.வ (ம) ஊ.து, நாள்: 09.12.1998-

ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாதாந்திர கட்டணம் ரூ.30–க்கு குறையாமல் குடிநீர் கட்டணம் செலுத்தப்படுவதை உறுதி செய்தல்.

- அனைத்து மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளிலும் "க்ளோரின் கலப்பான்" (Chlorinator) கருவிகளை பொருத்தி குடிநீரில் க்ளோரின் (Chlorine) கலப்பதை உறுதி செய்தல்.
- ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் அனைத்து வீடுகளுக்கும் 100 % குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்ட ஊராட்சியினை "வீடுதோறும் குடிநீர் வழங்கப்பட்ட ஊராட்சி" என கிராம சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கிராம ஊராட்சித் மன்ற தலைவரால் சான்றிதழ் வழங்குதல்.
- ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்ட பின்னர் வீட்டின் குடும்பத் தலைவரின் ஆதார் எண்ணினை பெற்று ஜல் ஜீவன் இயக்க இணையத்தளத்தில் (IMIS-Portal) பதிவேற்றம் செய்வதை உறுதி செய்தல்.

பொருள் 7 : **தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் மேம்பாட்டு திட்டம்**

அ) தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா (கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் பயிற்சி திட்டம்), திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக, தகுதி பெற்ற இளைஞர்களுக்கு (18 முதல் 35 வயதுடையவர்கள்) வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் தொடர்பாக தகவல் தெரிவித்தல் மற்றும் தகுதியுடையவர்களிடமிருந்து கோருதல் விண்ணப்பம்

ஆ) தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் 50 இளைஞர் திறன் திருவிழா மற்றும் 50 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது குறித்து விளக்குதல்.

திறன் பயிற்சி வேண்டுவோர் மற்றும் நேரடி வேலைவாய்ப்பு பெற விரும்பும் இளைஞர்களை இம்முகாம்களில் பங்கேற்று பயன்பெறுவது குறித்து தகவல் தெரிவித்தல்.

பொருள் 8 : **கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு**

கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவின்கீழ் தமிழகத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் பங்களிப்புடன் ஏழை எளிய மக்களின் நலிவுற்ற தன்மையையும், வறுமையையும். குறைப்பதற்காக கீழ்க்கண்ட தலைப்புகளில் கிராம செழுமை மீட்சித் திட்டம் (Village Prosperity Resilience Plan) தயார் செய்யப்பட்டு வருகின்றது.

1. உரிமை சார்ந்த திட்டம்
2. வாழ்வாதாரம் சார்ந்த திட்டம்

3.பொது சொத்துக்கள், சேவைகள் மற்றும் வள மேம்பாட்டு திட்டம்

4. சமூக மேம்பாடு திட்டம்

இத்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுவரும் கிராம செழுமை மீட்சித் திட்ட அறிக்கையினை பற்றி கிராம சபா கூட்டத்தில் கலந்துரையாடல் செய்யப்பட வேண்டும்.

பொருள் 9 : **கூட்டாண்மை வாழ்வாதாரம்**

2024-25 வாழ்வாதார திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் பெயர் மாற்றம் அல்லது பெயர் சேர்த்தல் தொடர்பான விவரங்களை கூட்டத்தில் விவாதித்தல்.

பொருள் 10 : **இதர பொருட்கள்**

கிராம சபை கூட்டத்தில் விவாதிக்கப்படும் ஏதேனும் பிற பொருட்கள் இருப்பின் கிராம சபையின் ஒப்புதலுக்கு கொண்டுவரப்படலாம் .

ஒம்/-பா.பொன்னையா,
இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி.

இயக்குநருக்காக

07/11/2024